**OS 38/2024**
(Old Os No.198/2018)
DW1 - சாது சுந்தர் சிங்
த/பெ வேலாயுதம்
18.11.2025

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் 2 முதல் 3 பிரதிவாதிகள் எனது தம்பிகள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி எனது தந்தை என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் மன்னன் கவுண்டர் என்றாலும், பாட்டி பெயர் பட்டம்மாள் என்றாலும் சரிதான். மன்னன் கவுண்டரின் அப்பா பெயர் பச்சயப்ப கவுண்டர் என்றால் சரிதான். பச்சயப்ப கவுண்டரின் மனைவி பெயர் சக்குபாய் என்றால் சரிதான். பச்சயப்ப கவுண்டர் மற்றும் சக்குபாய்க்கு 3 ஆண் மற்றும் 3 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். அவர்களின் பெயர் என்னவென்றால் காண்டீபன், அன்பழகன், செல்வாம்பாள், முனியம்மாள், ஜெயலட்சுமி மற்றும் எனது தாத்தா மன்னன் கவுண்டர் ஆவார்கள். எனது பாட்டி பட்டம்மாள் சத்துணவு துறையில் அரசாங்க ஊழியராக இருந்தாரா என்றால் அவர் ஆயாம்மா வேலை செய்தார். எனது பாட்டி பென்சன் வாங்குகிறார்களா என்றால் வாங்குகிறார். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் அதன் சர்வே எண் 157/3 ஆகும். சர்வே எண் 157/3ல் மொத்த விஸ்தீரணம் 19 சென்ட் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தானது ஆதியில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடம் என்று கூறியுள்ளேன் அதற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. 1976ல் எனது தாத்தா மன்ன கவுண்டர் வாங்கியதாக சொல்லப்படும் கிரயப்பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் 157/3ல் மொத்தம் 19 சென்ட்டில் 13 பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மன்ன கவுண்டர் 1967ல் கிரயம் வாங்கிய சொத்திற்கு மேற்கு பக்கத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தை மன்ன கவுண்டரும் பட்டம்மாளும் அனுபவம் செய்து வந்ததற்கான ஆவணம் ஏதேனும்

நான் தாக்கல் செய்துள்ளனோ என்றால் ஏதும் தாக்கல் செய்யவில்லை. என் பாட்டிக்கு எப்போது அரசாங்கத்தால் ஒப்படைப்பு செய்தார்கள் என்றால் 26.02.1992ல் ஒப்படைப்பு செய்து பட்டா கொடுத்தார்கள். பிவாசாஆ1 ஆவணமானது மனைவரி தோராய பட்டா ஆகும் நீங்கள் சொல்வது போல ஒப்படைப்பு ஆவணத்தை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரிந்து தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

எனது பாட்டி அரசு ஊழியராக வேலை செய்து வந்தனால் அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான வீட்டி மனையையும் அவரின் பெயரில் பெற இயலாது என்றால் சரியல்ல. பச்சயப்பட கவுண்டருக்கு 3 ஆண்கள் மற்றும் 3 பெண் பிள்ளைகள் இருந்தார்கள் என்றபோது மன்னக் கவுண்டர் பட்டமாள் ஆகியோர் வழக்கு சொத்தினை அனுபவித்து வந்ததாக தெரிவிப்பத தவறானது என்றால் சரியல்ல. என் பாட்டிக்கு கொடுத்த பட்டாவின் எண் என்னவென்றால் 398 ஆகும். என் பாட்டிக்கு கொடுக்கப்பட் பட்டாவின் விஸ்தீரனம் எவ்வளவும் என்றால் 1.50 சென்ட் இடம் ஆகும். வழக்கு சொத்து எந்த தெருவில் உள்ளது என்றால் மணியன் தெரு, அண்டம்பள்ளம் கிராமம் என்ற ஊரில் அமைந்துள்ளது.

பழைய சர்வே எண் 157/3ல் என்பது பல்வேறு துணை உட்பிரிவாக மாற்றியதில் அதில் ஒரு உட்பிரிவாக சர்வே எண் 157/13ல் மன்னக் கவுண்டர் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேலும், பழைய சர்வே எண் 157/3ல் என்பது பல்வேறு துணை உட்பிரிவாக மாற்றியதில் அதில் ஒரு உட்பிரிவாக சர்வே எண்157/14ல் பட்டம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

எனக்கு தானசெட்டில்மெண்ட் எப்போது செய்தார்கள் என்றால் 2011 ல் செய்தார்கள் அதில் எனக்கு 3 இடங்களை செட்டில்மெண்ட் செய்தார்கள் அதன் சர்வே எண் தெரியுமா என்றால் 2 இடங்களின் சர்வே எண் தெரியாது தற்போது வழக்கு சர்வே எண் 157/12 என்று எனக்கு தெரியும். மேற்படி 3 சர்வே எண்ணிற்கு ஒரே 4 எல்லைகளை காட்டி எழுதியுள்ளார்களா அல்லது ஒவ்வொரு

சர்வே எண்ணிற்கும் பிரித்து 4 எல்லைகளை காட்டி எழுதிறயுள்ளார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்ட மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் தெரியாது. பிவாசாஆ2 செட்டில்மெண்ட் ஆவணம் நான் தாக்கல் செய்தது தான் என்றால் சரிதான் அதில் உள்ள உள் அடக்கங்களை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எந்தவொரு சங்கதியையும் எனக்கு தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 2011ம் ஆண்டு எனது பாட்டி தான செட்டில்மெண்ட் எழுதிகொடுத்தார்கள் அந்த தான செட்டில்மெண்ட்டின் அடிப்படையில் எப்போது எனது பெயரில் நான் வருவாய் துறையிடம் பட்டா பெற்றேன் என்றால் எப்போது பட்டா பெற்றேன் என்று எனக்கு தெரியவில்லை.

எனது தம்பி மற்றும் என் பெயரில் உள்ள கூட்டு பட்டாவின் எண் தெரியுமா என்றால் 490 ஆகும். பட்டா எண் 490ஐ நான் எப்போது வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து புறம்போக்காக இருந்ததாகவோ பட்டா கொடுத்ததாகவோ எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் எனது பாட்டி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். இந்த வழக்கு சொத்தானது எனது பாட்டிற்கு பட்டா கொடுத்ததாக சொல்லப்படம் முன்னரே பவுனம்மாள் என்பவருக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் எனது பாட்டிக்கு முன்னர் யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை எனது பாட்டிக்கு தான் முதலில் பட்டா கொடுக்கப்பட்டது.
(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளை ஏற்றி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/– M.C. Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்